பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 25 வெள்ளிக்கிழமை 09.01.2026 | அதிர்வு 163

## தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவேந்தல் நாளை யாழ்ப்பாணத்தில்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# டக்ளஸுக்குப் பிணை

## வெளிநாட்டுப் பயணத் தடை விதிப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் அவர் இன்று முற்படுத்தப்பட்ட வேளை 20 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப்பிணைகளில்விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுக்கு இராணுவத்தால் அதிகாரபூர்வமாக வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகளில் ஒன்று வெலிவேரியா பகுதியில் பாழடைந்த இடமொன்றில் இருந்து மீட்கப்பட்டது.

பாதாளக் குழு உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமையவே துப்பாக்கி மீட்கப்பட்டிருந்தது. 04

# பிரதமரைப் பாதுகாப்போம்!

## நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை என்று அநுர அரசு தெரிவிப்பு

“பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டு வரத் துடிக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் அஞ்சப்போவதில்லை. பிரதமர் ஒரு பெண் என்பதற்காக அவர் மீது குற்றம் சுமத்தி, பலவீனப்படுத்த நினைக்கின்றார்கள். எனினும், பிரதமர் மிகவும் தைரியமாகத் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். அவரை எமது அரசு பாதுகாக்கும்.”

– இவ்வாறு தொழிலாளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# ஹரிணிக்கு எதிரான பிரேரணைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு

## நாமல் எம்.பி. அறிவிப்பு



கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவளிக்கும் என்று அதன் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

கல்வி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

நாட்டின் கல்விக் கட்டமைப்பு மேலும் சீர்குலைய இடமளிக்க முடியாது என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. கூறினார்.

கல்வித்துறையில் தற்போது நிலவும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டே இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதமர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி முறைமையைப் பாதுகாக்கும் நோக்கில் பொறுப்புடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும், இது நாட்டின் நலனுக்காகவே என்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. மேலும் தெரிவித்தார்.




# டிப்பர் - லொறி மோதி கோர விபத்து! இளைஞர் ஒருவர் பரிதாப உயிரிழப்பு!!

## மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

டிப்பர் வாக்கும் லொறியும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து பொலனறுவை – திம்புலாகலை பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

திம்புலாகலை பிரதான வீதியில் அதிவேகமாகப் பயணித்த டிப்பர் வாகனம் வீதியின் நெறிமுறையை மீறி லொறி வந்த பாதையில் நுழைந்ததால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் டிப்பர் வாகனத்தின் சாரதியான 28 வயது இளைஞர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த 25 வயது இளைஞரும், லொறியின் சாரதியான 37 வயது குடும்பஸ்தரும், அவரின் உதவியாளரான 24 வயது இளைஞருமான என மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# விடைபெறும் அமெரிக்கத் தூதுவர் பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு!

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜ/லி சங், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயர் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவை சந்தித்துக் கலந்துரையாடினார். .

இலங்கையில் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து கொண்டு எதிர்வரும் 16 ஆம் திகதி கொழும்பில் இருந்து அமெரிக்கத் தூதுவர் தாயகம் திரும்புகின்றார்.

இந்நிலையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை அவர் நேற்று வியாழக்கிழமை பிரியாவிடை நிமித்தம் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அமெரிக்கத் தூதுவரும் இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பில் கலந்துரையாடினர்.

மேலும் பிராந்திய பாதுகாப்பு, திறன் மேம்பாடு மற்றும் பரஸ்பர விடயங்களில் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கான வழிகள் குறித்தும் கலந்துரையாடினர்.

டித்வா சூறாவளியின் போது இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிக்காக அமெரிக்க அரசுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் தூதுவரின் சிறப்பான பங்களிப்புக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு அமெரிக்காவுடன் நெருக்கமான மற்றும் ஆக்கபூர்வமான உறவுகளைப் பேணுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதாக அமைந்தது.

அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் மத்யூ ஹவுசும் இதில் பங்கேற்றிருந்தார்.











# ஜோன்ஸ்டன் மற்றும் அவரது இரு மகன்கள் உட்பட ஐவருக்கு மீண்டும் விளக்கமறியல்!



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரது இரண்டு மகன்கள் உட்பட ஐவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்களை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் வழக்கறிஞர்கள் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரிய போதிலும் நீதிவான் அந்தக் கோரிக்கையை நிராகரித்து சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேகநபர்களின் தரப்பில் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நீதிவான் நிராகரித்தார்.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தனக்குச் சொந்தமானது என்று கூறப்படும் எத்தனால் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குச் சதொச லொறியைப் பயன்படுத்தியுள்ளார்.

இதனால் அரசுக்கு 2.5 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### டக்ளஸ் பிணையில்...

எனவே, அந்தத் துப்பாக்கி எவ்வாறு பாதாளக் குழு வசம் சென்றது என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட்கொலை விசாரணைப் பிரிவினர், விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

டக்ளஸ் தேவானந்த தரப்பில் உரிய பதில் வழங்கப்படாததால் அவர் கைது செய்யப்பட்டார். இரு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே இன்று அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. டக்ளஸ் தேவானந்தாவுக்கும், அவருக்குப் பிணை வழங்கிய இருவருக்கும் வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அடுத்தகட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### தமிழாராய்ச்சி...

52 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பொதுமக்களையும் கட்சி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் கலந்துகொண்டு அஞ்சலியை செலுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய ஸ்ரீமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

இதன்போது ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அதுட்டுமன்றி தமிழர்கள் மனத்தில் நீங்காத வடுக்களாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

### பிரதமரை...

தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்கள் மிகவும் அவசியமானவை என்பதை ஒட்டுமொத்த மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனினும், 6 ஆம் தர ஆங்கிலப் பாடத் தொகுதியில் ஏற்பட்ட ஒரு சிறு தவறை அடிப்படையாகக் கொண்டு, ஒட்டுமொத்த கல்விச் சீர்திருத்தத்தையுமே விமர்சிப்பது முறையற்றது. இந்தத் தவறு குறித்து கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகியன தனித்தனியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

விசாரணைகளின் முடிவில் உண்மை வெளிவரும். இதைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் தவறான பிம்பத்தை காண்பிக்க முயற்சிக்கின்றன, மக்கள் அதற்கு ஏமாற வேண்டாம்.

சர்ச்சைக்குரிய அந்த தகவல் ஏற்கனவே நீக்கப்பட்டுவிட்டது. மேலும், பிரதமர் ஹரிணி அமரசூரியவை இலக்கு வைத்து எதிர்க்கட்சியினர் கொண்டுவரத் துடிக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் அஞ்சப்போவதில்லை. பிரதமர் ஒரு பெண் என்பதற்காக அவர் மீது குற்றம் சுமத்தி, பலவீனப்படுத்த நினைக்கிறார்கள். எனினும் பிரதமர் மிகவும் தைரியமாகச் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஜனாதிபதி உட்பட இந்த அரசு எப்போதும் பிரதமருக்குப் பாதுகாப்பாகவும் துணையாகவும் இருக்கும் என்பதை நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் நிலவும் வதந்திகளிலும் உண்மையில்லை.

தனியார் மற்றும் பெருந்தோட்டத் துறை ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், அவர்களின் ஊழியர் சேமலாப நிதியைத் தொடர்ந்தும் வழங்கி, மேலதிகமாக ஒரு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதே எமது நோக்கம். ஊழியர் சேமலாப நிதியில் கைவைக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது.

எமது அரசு உழைக்கும் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்தையும் ஒருபோதும் கொண்டு வராது."
– என்றார்.

## ஐ.தே.க. - ஐ.ம.ச. கூட்டணி உருவானால்

# தலைமைப் பதவியை சஜித் ஏற்பதில் பிரச்சினையில்லை

### நவீன் திஸாநாயக்க அறிவிப்பு





"ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்த பின்னர் கூட்டணியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்பதில் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேர்தலில் இட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளலாம்.

முகாமைத்துவ குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். இரு தரப்பில் இருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். இரு தரப்பினரும் ஏற்கக் கூடிய ஒருவர் பொதுச்செயலாளர் பதவிக்கு வரவேண்டும்.

கூட்டணியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதில் பிரச்சினை கிடையாது. ஏனெனில் அவர்களுக்குதான் ஆதரவு தளம் அதிகமாக உள்ளது. இந்த உண்மையை ஏற்க வேண்டும்.

கூட்டணியின் தலைவராக சஜித்தும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும் செயற்பட வேண்டும். கட்சி ஆதரவாளர்களின் மனநிலையை ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது புரிந்துகொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் எமக்குப் பயணிக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைந்தால் வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியும்." – என்றார்.

# சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு பத்து வருட கடூழியச் சிறைத் தண்டனை

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கி.வசந்தன்)

வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட சிறுமியைப் பாலியல் வல்லுறவு புரிந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 18 ஆம் திகதி வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வு செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த 33 வயது சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்து பி அறிக்கை மூலம் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தி வழக்குத் தொடரப்பட்டது.

தொடர்ந்து 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி, 16 வயதுக்குட்பட்ட



சிறுமியைப் பாலியல் வன்புணர்வு புரிந்தார் என்று சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. குறித்த வழக்கு அரச சட்டவாதி ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீயால் நெறிப்படுத்தப்பட்ட நிலையில், குறித்த வழக்கின் சந்தேகநபரான வவுனியா விநாயகபுரம் பகுதியில் வசித்து வந்த 33 வயது நபர் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் வழக்கு விசாரணையின் போது உறுதி செய்யப்பட்டது.

அந்த வழக்கு தீர்ப்புக்காக இன்று திகதிடப்பட்டிருந்த நிலையில் வழக்கு விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பை வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கியது.

இதன்போது, வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹால் திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பை வாசித்துக் காட்டினார். குறித்த குற்றவாளிக்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கியதுடன், 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும், தவறின் 2 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இரண்டு இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் தவறின், ஒரு வருட சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இடமளிக்குமா அரசு?

பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியாவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கொண்டு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரம்தான் இப்போது தென்னிலங்கை அரசியலில் முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டாலும், நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்புக்கு இருக்கும் இராட்சத வலிமை காரணமாக இந்தப் பிரேரணை அரசாங்கத்தை ஆட்டிப் பார்க்கப் போவதில்லை என்பது நிச்சயம். ஆயினும், அதன் மீதான விவாதத்தை வைத்து அரசுக்கு எதிரான மக்கள் கருத்தியலை எதிரணி அமோகமாக தூண்டி விடும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

அதற்கு ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசு இடம் அளிக்குமா என்பதுதான் கேள்வி.

இந்தப் பிரேரணை விவாதத்துக்கு வராமல் இருக்கத் தன்னால் இயன்ற சகல வழிமுறைகளையும் ஆளும் தரப்பு முன்னெடுக்கும் என்பது திண்ணம்.

என்னதான் ஜனநாயகம் குறித்தும், அதன் உயரிய விழுமியங்கள் குறித்தும், நாடாளுமன்ற மரபுகள் குறித்தும் ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி அரசு பீற்றிக் கொண்டாலும், தன்னுடைய நலன் என்று வரும்போது அதுவும் நாடாளுமன்ற மரபுகள் மற்றும் நிலையியல் கட்டளைகளைத் தன்னிடம் உள்ள நாடாளுமன்ற பெரும்பான்மையை வைத்துக் கொண்டு மீறுவதற்கு தயங்காது என்பது வெள்ளிடைமலை.

ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல் தொடர்பான சில விடயங்களை ஒட்டி பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜெயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆளும் தரப்பு தடுத்த முறைமை இவ்விடயத்தில் ஒரு மோசமான உதாரணமாகக் கொள்ளத்தக்கது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தைப் பயன்படுத்தி தமது கல்விச் சீர்திருத்தம் பற்றிய விடயங்களைத் தாம் தெளிவுபடுத்துவார் என்ற சாரப்பட கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியா இப்போது கருத்து வெளியிட்டிருக்கிறார். ஆயினும், இந்தப் பிரேரணை சபையில் விவாதத்துக்கு வருவதற்கு அரசாங்கம் இடம் அளிக்குமா அல்லது முன்னர் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபைக்கு வராமலேயே வெட்டி விட்ட ஜனநாயக விரோதப் போக்கை இதிலும் ஆளும்தரப்புக் கடைபிடிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

கல்விச் சீர்திருத்தங்கள் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட விடயமாகினும், அவை தயாரிக்கப்பட்ட முறைமையும் அவசரமும் பலவித சந்தேகங்களை எழுப்பாமல் இல்லை. அதிகாரப் பலத்தின் ஆணவம் யதார்த்தங்களை அரசுக்கு மறைக்கின்றது என்றே தோன்றுகின்றது. கல்விச் சீர்த்திருத்தம் தொடர்பான விடயங்களை சம்பந்தப்பட்ட பங்காளர்களின் உரிய பங்களிப்போடு முன்னெடுக்க ஆளுந்தரப்புத் தவறிவிட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இயற்கை உரத்தை மாத்திரம் பயன்படுத்தும் ஒரு திட்டத்தை கண்மூடித்தனமாக ஒரு வருடத்திற்குள் நடைமுறைப்படுத்த முயன்று தம்மைத் தாமே வீழ்த்துவதற்கு வலை விரித்தார். அதுபோல தேசிய மக்கள் சக்தி அரசின் அவசரப் பிரசவமான இந்தக் கல்வி சீர்திருத்தம் அதன் செல்வாக்கு நிலைக்குச் சாவு மணி அடிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# காரைதீவில் கடலரிப்பு அதிகரிப்பு; மீனவர்களின் உடமைகள் சேதம்





(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக காரைதீவு கடற்கரையில் கடலரிப்பின் வேகம் அதிகரித்-துள்ளது.

இதன் காரணமாக மீனவர்களின் உடமைகள் சேதமடைந்துள்ளதுடன், தென்னை மரங்கள் பல விழுந்துள்ளன.

அதேவேளை, தாழ் நிலப் பகுதியில் வெள்ளம் தேங்கி காணப்படுகிறது.

இந்த அனர்த்தங்கள் காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் களுவாஞ்சிக்குடியில் முன்னெடுப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக் குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களைச் சூழ பல்வேறு இடங்களில் தேசிய டெங்கு ஒழிப்பு விசேட வேலைத் திட்டம் இன்று வெள்ளிக் கிழமையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது அப்பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் பார்வையிடப்பட்டன.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய தனியார் கல்வி நிலையங்களில் சகல உட்கட்டமைப்பு வசதிகளும் இரண்டு வாரங்களுக்குள் சீர் செய்யப்பட வேண்டும் எனவும் டெங்கு பரவும் அபாயம் உள்ள சகல தனியார் கல்வி நிலையங்களும் உடனடியாக சுத்தப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதன்போது டெங்கு அபாயம் பரவக் கூடிய பல்வேறு இடங்கள் அடையாளம் காணப்பட்டதுடன், அவ்வாறு அடையாளம் காணப்பட்ட இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் சுகாதார பரிசோதகர்களால் விடுக்கப்பட்டது.







# கொட்டகலை ஆகீல் தோட்டத்தின் குடியிருப்புப் பகுதியில் தீ பரவல்







(எஸ். சதீஸ்)

பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை ஆகீல் தனியார் தோட்டத்தில் இன்று காலை தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்த தீ பரவல் காரணமாக ஒரு குடியிருப்பு முற்றிலும் எரிந்து சாம்பல் ஆகியுள்ளது. அருகில் இருந்த மேலும் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

திம்புள்ள பத்தனை பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தீ பரவல் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, உயிர்சேதங்களோ காயங்களோ எதுவும் ஏற்படவில்லை எனவும் தீரபரவலுக்கான காரணம் இதுவரை கண்டரிய பட வில்லை என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.









# சாய்ந்தமருது ஹிதாயா மத்ரஸாவில் சர்வதேச அரபு மொழி தின நிகழ்வு



**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சாய்ந்தமருது மத்ரஸதுல் ஹிதாயா குர்ஆன் பாடசாலையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சர்வதேச அரபு மொழி தின நிகழ்வும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நேற்று ஹிதாயா பள்ளிவாசலில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் ஏ.எம். ஜௌபர் ஹாஜியார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாவடிப்பள்ளி சஹ்த் இஸ்லாமிய அறபுக் கல்லூரியின் விரிவுரையாளரும் சாய்ந்தமருது ஹிலால் பள்ளிவாசல் பேஷ் இமாமுமான அஷ்ஷெய்க் யூ.எல்.எம். யாஸிர் விஷேட மார்க்க சொற்பொழிவாளராக கலந்து கொண்டு வாழ்வியலில் அல்குர்ஆனின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார்.

அத்துடன், மஸ்ஜிதுல் ஹிதாயா பள்ளிவாசல் பேஷ் இமாமும்

மத்ரஸா அதிபருமான அஷ்ஷெய்க் எஸ்.ஏ.எம். ஜினான், சாய்ந்தமருது ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். சலீம், மத்ரஸா முஅல்லிம் அஷ்ஷெய்க் ஏ.கே.எம். சமீர் ஆகியோரும் உரையாற்றினர்.

இவர்களுடன் சாய்ந்தமருது ஜம்மியதுல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷெய்க் எச்.எம். நப்றாஸ், இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓய்வுபெற்ற உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீப், ஓய்வுபெற்ற அதிபர் அப்துல் ஹமீட், பள்ளிவாசல் முஅத்தின் எம்.ஐ. அபூபக்கர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி வைத்தனர்.

இதன்போது மாணவர்களினால் அரபு மற்றும் இஸ்லாமிய மார்க்கம் சம்மந்தப்பட்ட அறிவுசார், கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டன. சிரேஷ்ட அறிவிப்பாளர் எம்.பி.எம். றின்ஸான் விழா நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

இந்த விழாவில் உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் பங்கேற்றிருந்தனர்.

குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வாங்குவதற்கு வவுச்சர்கள் வழங்கிவைப்பு













( வி.ரி.சகாதேவராஜா)

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தால் காரைதீவு விநாயகர் மீனவர் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களின் பாடசாலை செல்லும் 18 பிள்ளைகளிற்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான 4000 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு சங்கத்தின் செயலாளர் ர.சுஜீதன் தலைமையில் காரைதீவு வீரபத்திரர் அறநெறி பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் ஒழுங்கமைப்பில், காரைதீவினை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவினை வசிப்பிடமாகவும் கொண்ட பொறியியலாளர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் இதற்கான பூரண அனுசரணை வழங்கியிருந்தார்.

ஒன்றியத்தின் சிரேஸ்ட உறுப்பினர் ஆர்.பிரதீபராஜ் அங்கிருந்து இந்த செயற்றிட்டத்திற்கு இணைப்பாளராக செயற்பட்டார்.

இந்த நிகழ்வில் கற்றல் உபகரணங்களிற்கான வவுச்சர்களை பெற்று கொள்ளும் மாணவர்கள் உட்பட மீனவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களோடு, ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.







# புத்தளம் வடக்கு கோட்டத்தில் புதிய பணிப்பாளர் பதவியேற்பு

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் வடக்கு கோட்டத்தின் புதிய பணிப்பாளராக, உதவிக்கல்விப் பணிப் பாளர் திருமதி ஏ.எஸ்.நஸ்லியா நேற்று தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் 10 வருடங்கள் வடக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி , வலயக்கல்விப்பணி மனைக்கு இடமாற்றம் பெற்றுள்ள பிரதி கல்விப்பணிப்பாளர் திருமதி ஏ.அஸ்கா, வலயக்கல்விப் பணிமனை யின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்துக்கொண் டனர்.



10 வருடங்கள் பணியாற்றிய பணிப் பாளர் ஏ.அஸ்காவின் சேவைகள் நினைவு கூரப்பட்டு பாராட்டும், நன்றியும் தெரி விக்கப்பட்டதோடு, புதிய பணிப்பாள ருக்கு வாழ்த்துக்களும் வழங்கப்பட் டன.



# கல்கமுவவில் லொறி மோதி யானைக் குட்டி உயிரிழப்பு

**(க.மகாதேவன்)**

கல்கமுவ, அம்பன்பொல காசி கொட்டே பிரதேசத்தின் வனப்பகுதி பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் யானை குட்டி ஒன்று உயி ரிழந்துள்ளது.

வீதியில் சென்ற காட்டு யானை குட்டி மீது லொறி ஒன்று மோதியதில் அந்த யானை குட்டி உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் வன விலங்குகளின் பாதுகாப்பு மீதான அவசியத்தை மீண் டும் உணர்த்துகிறது என மக்கள் தெரி விக்கின்றனர்.





# மட்டக்களப்பில் பெய்துவரும் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை

**(மட்டக்களப்பு நிருபர்)**

வடகீழ் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சி மட்டக்களப்பு மாவட்டத்திலும் இடையிடையே பெய்து வருகின்றது.

இதனிடையே தொடர்ந்து வானம் மேகமூட்டம் சூழ்ந்து காணப்படுவதோடு, மப்பும் மந்தாரத்துடனும் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகங்களும் தயர்ப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், முப்படையினரும் தயார் நிலையில்உள்ளனர்எனமாவட்டஅனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பானர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் புலிபாய்ந்தகல் பிரதான வீதியை ஊடறுத்து வெள்ள நீர்பாய்ந்து வருவதனால் அவ்வீதியுடனான தரை வளிப்போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன், படகுச் சேவை இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான 24 மணித்தியாலத்தில் வாகனேரிப் பகுதியில் 45.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 33.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 22.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கட்டுமுறிவுப் பகுயியில 23 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், கல்முனைப் பகுதியில் 25.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதான குளங்களின் நீர்ட்டங்களும் வெகுவாக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த வகையில் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 29 அடி 3 அங்குலம், நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 28 அடி 8 அங்குலம், தும்பங்கேணிக் குளத்தின் நீர்மட்டம் 15 அடி 9 அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 14 அடி ஒரு அங்குலம், வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 17 அடி 5அங்குலம், கட்டுமுறிவுக் குளத்தின் நீர்மட்டம் 11 அடி 6 அங்குலம், கித்துள்வெவக் குளத்தின் நீர்மட்டம் 11 அடி 7 அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 15அடி 7அங்குலம், வடமுனைக்கு குளத்தின் நீர்மட்டம் 12அடி 6 அங்குலம், உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்பாசனப் பொறியியாளர்கள் தெரிவிக்கின்றனர்.







# சம்மாந்துறை சபூர் வித்தியாலய அதிபரின் இடமாற்றத்திற்கு எதிராகப் போராட்டம்



**(நூருல் ஹுதா உமர்)**

சம்மாந்துறை சபூர் வித்தியாலய அதிபரின் திடீர் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யக்கோரி, இன்று காலை பாடசாலைக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், பின்னர் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்னால் முற்றுகைப் போராட்டமாக மாற்றமடைந்தது.

இந்த போராட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு, வலயக் கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இன்று காலை சபூர் வித்தியாலயத்திற்கு முன்னால் ஒன்று திரண்ட போராட்டக்காரர்கள், அதிபரின் இடமாற்றத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இதனைத் தொடர்ந்து, போராட்டக் குழுவினர் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு ஊர்வலமாகச் சென்று, அலுவலக நுழைவாயிலை மறித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, திறமையான நிர்வாகத்துடன் பாடசாலையை கல்வி மற்றும் ஒழுக்க ரீதியாக முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்ற அதிபரை, முறையற்ற விதத்தில் இடமாற்றம் செய்வது பாடசாலைச் சமூகத்துக்கு இழைக்கும் அநீதியாகும் என பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர்.

கல்வி அதிகாரிகளே, எமது பாடசாலையின் வளர்ச்சியில் விளையாடாதீர்கள், அதிபரின் இடமாற்றத்தை உடனே நிறுத்துங்கள் எனும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் பாடசாலைச் சமூகம் மற்றும் பெற்றோர்கள் சார்பில் தயாரிக்கப்பட்ட விசேட கோரிக்கை மனு சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.










# பட்டினமும் சூழலும் பிரதேச சபையால் நடமாடும் கடைத் தொகுதி விநியோகம்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகர்ப்புற மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சபை நிதியின் கீழ் 22 நடமாடும் கடைகள் விநியோகிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகர தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











## ‘ஜனநாயகன்’ தீர்ப்புக்கு எதிர்ப்பு:

# மேல்முறையீட்டு மனுவை தயாரிக்கும் தணிக்கை சபை

நடிகர் விஜய்யின் ‘ஜனநாயகன்’ படத்துக்கு தணிக்கை சான்று வழங்கும்படி தனிநீதிபதி விடுத்த உத்தரவுக்கு எதிராக, தணிக்கை சபை தரப்பில் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் முறையீடு செய்யப்பட்டது. மனுவாக தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுக்கப்படும் என தலைமை நீதிபதி ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

‘ஜனநாயகன்’ படத்துக்கு தணிக்கை சான்று வழங்கக் கோரி, பட தயாரிப்பு நிறுவனமான, கே.வி.என். புரொடக்ஷன்ஸ் நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.



இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷா, படத்துக்கு யு/ ஏ சான்று வழங்க முடிவு செய்த பின், படத்தை ஆய்வு செய்த குழு உறுப்பினர், புகார் அளித்துள்ளமை பிந்தைய சிந்தனை. இதுபோன்ற புகாரை ஏற்றுக் கொண்டால் அது அபாயகரமானதாகி விடும்.

ஏற்கெனவே படத்தை பார்த்து, தணிக்கை குழுவினர் தெரிவித்த மாற்றங்களை செய்த பின், படத்தை மறு ஆய்வு குழுவுக்கு அனுப்ப தணிக்கை சபை தலைவருக்கு அதிகாரம் இல்லை எனக் கூறி, படத்தை மறு ஆய்வு குழுவுக்கு அனுப்ப தணிக்கை சபை தலைவர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார். மேலும், படத்துக்கு உடனடியாக தணிக்கை சான்று வழங்க, தணிக்கை சபைக்கு உத்தரவிட்டார்.

தனிநீதிபதி பிறப்பித்த இந்த தீர்ப்புக்கு எதிராக, தணிக்கை சபை தரப்பில், தலைமை நீதிபதி ஸ்ரீவஸ்தவா தலைமையிலான அமர்வில், மத்திய அரசின் தரப்பில் மூத்த வழக்கறிஞர் ஏ ஆர் எல் சுந்தரேசன் முறையீடு செய்தார்.

முறையீட்டை கேட்ட தலைமை நீதிபதி, மனுவாக தாக்கல் செய்தால் எப்போது விசாரிக்கலாம் என்பது குறித்து முடிவு செய்யப்படும் என தெரிவித்தார்.

இதையடுத்து, மேல்முறையீட்டு மனுவை தயார் செய்து தாக்கல் செய்யும் பணியை தீவிரமாக மத்திய தணிக்கை வாரியம் மேற்கொண்டு வருகிறது.

## அமுலாக்கத் துறை சோதனைக்கு எதிர்ப்பு:

# அமித் ஷாவின் அலுவலகம் முன்னால் திரிணமூல் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் வியூகங்களை வகுத்தளிக்கும் ஐ-பேக் நிறுவனத்தின் கொல்கத்தா அலுவலகம், கொல்கத்தாவில் உள்ள அதன் இயக்குநர் வீடு உட்பட 10 இடங்களில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து டில்லியில் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் அலுவலகத்தை முற்றுகையிட்டு அக்கட்சியின் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



திரிணமூல் காங்கிரஸ் (டி.எம்.சி) கட்சியின் எம்.பிக்களான டெரெக் ஓபிரேன், சதாப்தி ராய், மஹுவா மொய்த்ரா, கீர்த்தி ஆசாத் உள்ளிட்டோர், டில்லியில் உள்ள உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் இல்லத்தை முற்றுகையிட்டு அமித் ஷாவுக்கு எதிராகவும், அமலாக்கத் துறைக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

இவர்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து அமித் ஷா அலுவலகத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. டி.எம்.சி. எம்.பிக்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முயன்றபோது அவர்களை டில்லி பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மஹுவா மொய்த்ரா, "தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை டில்லி பொலிஸார் எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதை நீங்களே பாருங்கள். மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே அமுலாக்கத் துறை சோதனை நடத்தப்படுகிறது. தேர்தலில் நாங்கள் நிச்சயம் பா.ஜ.கவை தோற்கடிப்போம்." என தெரிவித்தார்.

# த.வெ.க தேர்தல் அறிக்கை தயாரிக்க 12 பேர் கொண்ட குழு அமைப்பு

## விஜய் அறிவிப்பு

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக தமிழக வெற்றிக் கழகம் சார்பில் குழுவினை அமைத்து அக்கட்சியின் தலைவர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

"தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கப்பட இருக்கிறது.

இதற்காக சிறப்பு குழு அமைக்கப்படுகிறது. இந்த குழு தமிழகம் முழுவதும் பொதுமக்கள் சிறு குறு தொழில் அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், பொருளாதார மற்றும் தொழில் வல்லுநர்கள், வர்த்தக சபைகள், பல்வேறு ஊழியர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துக்களையும் தேவைகளையும் அறிந்து தரவுகளை பெற உள்ளது.

அவர்களிடமிருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில், தமிழ் நாட்டு மக்களையும், ஒட்டுமொத்த மாநிலத்தையும் வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் வகையில் தேர்தல் அறிக்கையினை தயார் செய்ய உள்ளது. மேற்கண்ட குழுவினருக்கு கழகத் தோழர்கள் முழு ஒத்துழைப்பு நல்குவதோடு, அந்தந்த பகுதிகளில் சம்பந்தப்பட்ட அமைப்புகளை சந்திக்கும் பொழுது தேவையான உதவிகளை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

# குற்றவியல் கும்பல்களிடம் இருந்து அமெரிக்கா அதிகாரத்தை பறிக்கும்

## துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவிப்பு

வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்கா தங்கள் நாட்டுக்கு கொண்டு சென்ற நிலையில், குற்றவியல் கும்பல்களிடம் இருந்து அதிகாரத்தை அமெரிக்கா பறிக்கும் என்று அந்நாட்டின் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய ஜே.டி. வான்ஸ்,

“அமைதியை நிலைநாட்டுவதற்கான வழிகளில் ஒன்று, அமெரிக்கா அதைச் செய்யும் என்பதை தெளிவுபடுத்துவது. இதன்மூலம் அமெரிக்கா மதிக்கப்படும். குற்றவியல் கும்பல்களிடம் இருந்து அதிகாரத்தை அமெரிக்கா பறிக்கும் என்பதை தெளிவுபடுத்த நாங்கள் விரும்புகிறோம். அத்தகைய கும்பல்களிடம் இருந்து அதிகாரத்தைப் பறித்து, அதை சட்டப்பூர்வ அரசாங்கங்களுக்கு வழங்க அமெரிக்கா தயாராக உள்ளது.



குற்றவியல் கும்பல்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதிகாரத்தை நிலைநாட்டுவது மற்றும் சட்டப்பூர்வமான அரசாங்கங்களை வலுப்படுத்துவது ஆகியவற்றில்தான் அமைதி உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

வெனிசுலா தலைநகர் கராகசில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை அமெரிக்க இராணுவம், அதிரடியாக கைது செய்து தங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்றதை அடுத்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்,

“போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள் உள்ள நிலப்பரப்பின் மீது நாங்கள் தாக்குதல் நடத்தப் போகிறோம். போதைப்பொருள் கும்பல்தான் மெக்ஸிகோவை ஆள்கின்றன.” என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ட்ரம்ப்பின் கூற்றை உறுதிப்படுத்தும் விதமாக ஜே.டி. வேன்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கா, இஸ்ரேலின் பயங்கரவாத முகவர்களே போராட்டங்கள், வன்முறையைத் தூண்டிவிட்டனர்

## ஈரான் குற்றச்சாட்டு

ஈரானில் நடந்துவரும் போராட்டங்கள் மற்றும் வன்முறையைத் தூண்டியதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் 'பயங்கரவாத முகவர்களே காரணம் என்று ஈரான் அரசு ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஈரான் அரசு தொலைக்காட்சியில் இன்று காலை 8 மணி செய்தி ஒளிபரப்பில் வெளியான அறிக்கையில்,

"நாட்டில் நடந்துவரும் போராட்டங்கள் மற்றும் வன்முறையை தூண்டியதற்கு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பயங்கரவாத முகவர்களே காரணம். இந்தப் போராட்டங்களில் வன்முறை வெடித்து உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இந்தப் போராட்டங்களின்போது மக்களின் தனிப்பட்ட கார்கள், மோட்டார் சைக்கிள்கள், மெட்ரோ ரயில் சேவை போன்ற பொது இடங்கள், தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பஸ்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன." என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரானில் பொருளாதார வீழ்ச்சி மற்றும் ஈரானிய ரியாலின் மதிப்பு சரிவுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள் கடந்த இரண்டு வாரங்களாகத் தொடர்கின்றன. இப்போராட்டம் நேற்று வியாழக்கிழமை மிகப்பெரிய அரசாங்க எதிர்ப்பு போராட்டமாக உருவெடுத்தது. நாட்டின் நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் இன்றும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக சந்தைகள் மற்றும் 'பஜார்கள்' மூடப்பட்டிருக்கும் நிலையில், போராட்டங்களால் ஏற்பட்ட வன்முறை காரணமாக 45 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 2,260 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. டிசம்பர் 28 அன்று தெஹ்ரான் 'பஜாரில்' கடையடைப்புடன் தொடங்கிய இந்தப் போராட்டங்கள், தற்போது ஈரானின் 31 மாகாணங்களுக்கும் பரவியுள்ளன.

போராட்டம் பரவுவதை தடுக்க ஈரான் அரசாங்கம் நாட்டில் இணைய சேவையை முடக்கியதுடன், சர்வதேச தொலைபேசி அழைப்புகளையும் துண்டித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு மக்கள் தெருக்களில் இறங்க வேண்டும் என்று







நாடு கடத்தப்பட்ட பட்டத்து இளவரசர் ரெசா பஹ்லவி விடுத்த அழைப்பைத் தொடர்ந்து, ஈரானில் போராட்டங்கள் நேற்று வியாழக்கிழமை அன்று தீவிரமடைந்தன.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை | 09/01/2026

## தங்க ஏற்றுமதியில் கனடாவின் சாதனை

கனடா அதன் தங்க ஏற்றுமதியில் புதிய சாதனை படைத்துள்ளது.

2026 ஜனவரியில், அமெரிக்காவைத் தவிர்த்து பிற நாடுகளுக்கான தங்க ஏற்றுமதியில் கனடா புதிய 03▶



# ட்ரம்பின் ஆக்கிரமிப்புப் பட்டியலில் வெனிசுலாவை அடுத்தது கனடாவா?

## நிபுணர்கள் கருத்து

**அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வெனிசுலா ஜனாதிபதியை கைது செய்துள்ளார், கிரீன்லாந்தைப் பிடிக்கப்போவதாக கூறிவருகிறார்.**

**அத்துடன், கொலம்பியா ஜனாதிபதி மற்றும் மெக்சிகோ போதைக்கும்பல் விடயங்களிலும் தலையிடப்போவதாகவும் கூறியுள்ளார்.**

**இந்நிலையில், ஏற்கனவே கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இணைக்கப்போவதாக ட்ரம்ப் மிரட்டியிருப்பதால், கனடாவுக்கும் சிக்கல் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது!**

**ஐ.நா அமைப்புக்கான முன்னாள் தூதரான பாப் ரே, அமெரிக்க ஆக்கிரமிப்புப் பட்டியலில் கனடா இல்லை என கனேடியர்கள் எண்ணுவார்களானால், அது தவறான எண்ணமாகும் என்று கூறியுள்ளார்.**

மேலும், ட்ரம்ப் நிர்வாகம், கனடாவின் இறையாண்மையை 'சீரியஸாக' எடுக்கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். அத்துடன், ஆடம் கோர்டன் என் னும் Royal Roads பல்கலை பேராசிரி யரும், ட்ரம்ப் நிர்வாகம் கனடாவுக்கு எதிராக உண்மையாகவே இராணுவ நடவடிக்கை எடுக்கும் அபாயம் உள்ளது என்பதற்கான ஆதாரங்கள் அதிகமாகிக்கொண்டே வருகின்றன என தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் வெனிசுலா விடயத்தில் இப்படி ஒரு நடவடிக்கை எடுத்துள்ளாரென்றால், கனடா மீதும் அவர் நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது என்று கூறியுள்ள ஆடம், ஆகவே, நாம் அதற்கு தயாராக இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இப்படி, சில நிபுணர்கள் ட்ரம்ப் கனடாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடும் என கருத்து தெரிவித்துள்ள நிலையில், கனடா பிரதமரான மார்க் கார்னி மற்றும் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இருவருக்கும் ஆலோசகராக பணியாற்றியவரான ஜெரால்ட் பட்ஸ் என்பவர், வர்த்தக பேச்சுவார்த்தைகளில் கனடாவை விட அதிக செல்வாக்கு பெற ட்ரம்ப் நிர்வாகம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என்றும், அதில் கனேடிய அரசியலில் செல்வாக்கு செலுத்த முயற்சிப்பதும் அடங்கும் என்றும், ஆனாலும், இராணுவ நடவடிக்கை எடுக்கும் திட்டம் அதில் இருப்பதாக தான் கருதவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



# சர்வதேச மாணவர்களின் வேலை நேரம் குறைப்பு; புதிய விதிகளை அறிவித்துள்ளது கனடா அரசு

கனடா அரசு, இந்த ஆண்டு முதல் சர்வதேச மாணவர்களின் வேலை நேரத்தை குறைக்கும் புதிய விதிகளை அறிவித்துள்ளது.

இதனால் சர்வதேச மாணவர்களும் நேரடியாக பாதிக்கப்பட உள்ளனர்.

வாரத்திற்கு 24 மணி நேரம் மட்டுமே மாணவர்கள் கல்லூரிக்கு வெளியே வேலை செய்ய அனுமதி வழங்கப்பட்டும்.

முன்பு 20 மணி நேரமாக இருந்த வரம்பு, கொவிட் காலத்தில் தற்காலிகமாக அதிகரிக்கப்பட்டது. இப்போது 24 மணி நேரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோடை விடுமுறை, குளிர்கால விடுமுறை, 'ரீடிங் வீ போன்ற கல்வி இடைவெளிகளில் மாணவர்கள் வரம்பில்லாமல் வேலை செய்யலாம்.

அதேபோல், கல்லூரி வளாகத்திற்குள் வேலை செய்வதற்கு எந்த நேர வரம்பும் இல்லை. செல்லுபடியாகும் Study Permit கொண்டிருக்க வேண்டும்.

ஒரு அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் முழுநேர படிப்பு இருக்க வேண்டும்.

படிப்பு குறைந்தது 6 மாதங்கள் நீடிக்க வேண்டும் மற்றும் டிப்ளோமா, டிகிரி அல்லது சான்றிதழ் வழங்கும் வகையில் இருக்க வேண்டும்.

வேலை செய்யும் முன் Social Insurance Number (SIN) பெற வேண்டும்.

மாணவர்கள் கல்வியை விட வேலைக்கு முக்கியத்துவம் தருவதாக அரசு கவலைப்படுகின்றது.

உள்ளூர் வேலை சந்தையில் அழுத்தம் அதிகரித்ததால், கல்வியே முக்கிய நோக்கம் என்பதை உறுதி செய்ய விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

விதிகளை மீறினால், விசா ரத்து, எதிர்கால புலம்பெயர்வு விண்ணப்பங்கள் நிராகரிப்பு போன்ற கடுமையான விளைவு ஏற்படும்.

கனடாவில் அதிகமான சர்வதேச மாணவர்கள் இந்தியர்களே. உயர்ந்த கட்டணங்கள் மற்றும் விலைவாசியை சமாளிக்க பகுதி நேர வேலை அவசியமாகிறது.

புதிய விதிகள், மாணவர்கள் வேலை நேரத்தை குறைத்தாலும், கல்வி தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமுல்படுத்தப்பட்டுள்ளன.





# கனடா வாழ் யாழ். குடும்பப் பெண் கனரக வாகனம் மோதி உயிரிழப்பு

கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் புங்குடுதீவை சேர்ந்த கனடா வாழ், 3 பிள்ளைகளின் தாயான 35 வயது பெண்னே விபத்தில் உயிரிழந்துள்ளார். எட்டோபிகோக் டிக்சன் பகுதியில் இந்தப் பெண் வீதியைக் கடக்கும் போது கனரக வாகனத்தைச் செலுத்தி வந்த 26 வயதான சாரதி வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பெண் மீது மோதியுள்ளார். விபத்தில் சம்பவ இடத்திலேயே பெண் உயிரிழந்துள்ளார் என தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.








# கனடாவின் அல்பேர்டா மாகாணத்தில் அவசர நிலை அறிவிக்குமாறு கோரிக்கை

கனடாவின் அல்பேர்டா மாகாணத்தில் அவசர நிலை அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடாவின் அல்பேர்டா மாகாண மருத்துவமனைகளில் நிலவும் நிலைமை மிகவும் மோசமானதாக மாறியுள்ள நிலையில், உடனடியாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என சில மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மாகாணம் முழுவதும் உள்ள மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை பிரிவுகளின் கோரிக்கையின் பேரில், அல்பேர்டா அரசு அவசர நிலை அறிவிக்க வேண்டும் என அல்பேர்டா மருத்துவ சங்கத்தின் அவசர மருத்துவப் பிரிவின் தலைவர் வைத்தியர் பால் பார்க்ஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிலைமை இப்போது முற்றிலும் நெருக்கடி நிலைக்கு சென்றுள்ளது. காத்திருப்பு அறைகளிலேயே நோயாளிகள் உயிரிழக்கின்றனர் என தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற சூழல் காரணமாக பலருக்கு கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கான உதாரணமாக, இந்த வாரம் எட்மன்டனில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவதற்காக காத்திருந்த இரண்டு நோயாளிகள், ஒருவர் சுமார் 72 மணி நேரமும் மற்றொருவர் 48 மணி நேரமும் காத்திருந்ததாக அவர் கூறியுள்ளார்.

“இது ஒரு நெருக்கடி என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும். இந்த நிலையை சமாளிக்க யார் பொறுப்பேற்கப் போகிறார்கள், மாகாண அளவிலான பேரிடர் மேலாண்மை அணியை யார் வழி நடத்தப் போகிறார்கள் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் பாதுகாப்பான மற்றும் காலத்துக்குள் வழங்கப்படும் அவசர சிகிச்சையை மீட்டெடுக்க முடியும்,” என வைத்தியர் பார்க்ஸ் தெரிவித்துள்ளார்.




## தங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உச்சத்தை எட்டியுள்ளது.

இந்த வளர்ச்சி, கனடாவின் வர்த்தகத்தில் புதிய மாற்றத்தை உருவாக்கியுள்ளது.

ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுக்கு கனடாவின் தங்க ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

அதில், சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் கனடாவிலிருந்து அதிக அளவில் தங்கத்தை வாங்கியுள்ளன.

இதனால், கனடாவின் மொத்த தங்க ஏற்றுமதி உயர்ந்துள்ளதால், உற்பத்தி மற்றும் எரிசக்தி போன்ற பிற துறைகளில் உள்ள குறைபாடுகளை மறைத்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவை சார்ந்திருந்த வர்த்தகத்தில் இருந்து விலகி, பல்வேறு சந்தைகளில் கனடா தன்னை நிலைநிறுத்தும் முயற்சியில் உள்ளது.

உலகளாவிய பொருளாதார அசாதாரண நிலைமைகள் மற்றும் அரசியல் பதற்றங்கள் காரணமாக, தங்கம் பாதுகாப்பான முதலீடாக பார்க்கப்படுகிறது. இதனால் கனடாவின் தங்கத்திற்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது.

கனடாவின் பொருளாதாரத்திற்கு இது ஒரு தற்காலிக ஆதரவாக இருந்தாலும், நீண்ட காலத்தில் பிற துறைகளில் உள்ள பலவீனங்களை சரிசெய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

கனடா இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளுடன் வலுவான வர்த்தக உறவுகளை உருவாக்க வேண்டும் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.